| 31. | கடை எண். 31 | என். சுரேந்திரன், | 6 x 6 | 1150— |
| 32. | கடை எண். 32 | வெங்கடாசலம் | 6 x 6 | 1000— |
| 33. | கடை எண். 33 | டி. மோகன் | 6 x 6 | 1300— |
| 34. | கடை எண். 34 | சதீஸ்குமார் | 6 x 6 | 1100— |
| 35. | கடை எண். 35 | ஆர். வெங்கடேஷ் | 6 x 6 | 1600— |
| 36. | கடை எண். 36 | இ.கே. சுப்பிரமணி | 6 x 6 | 1150— |

| | | | | |
|---|---|---|---|---|
| 37. | கடை எண். 37 | விஜயகுமார் | 6 x 6 | 1250– |
| 38. | கடை எண். 38 | சீனிவாசன் | 6 x 6 | 1400– |
| 39. | கடை எண். 39 | பி. ஸ்ரீதரன், த/பெ. பழனியப்பன் | 6 x 6 | 1800– |
| 40. | கடை எண். 40 | ஏ. நாகராஜ், த/பெ.ஆறுமுக செட்டியார் | 6 x 6 | 4150– |
| 41. | கடை எண். 41 | பி. ரமேஷ் | 6 x 6 | 1300– |
| 42. | கடை எண். 42 | சாந்தி, க/பெ. கதிர்வேல் | 6 x 6 | 1150/– |
| 43. | கடை எண். 43 | ஆர். செந்தில்குமார், த/பெ. ரங்கராஜ் | 6 x 6 | 6050/– |
| 44. | கடை எண். 44 | எஸ். சரவணன், த/பெ. சேகர் | 6 x 6 | 1200/– |
| 45. | கடை எண். 45 | கதிர்வேல், த/பெ. அங்கமுத்து | 6 x 6 | 1200– |
| 46. | கடை எண். 46 | எம். கலா, க/பெ. மணிகண்டன் | 6 x 6 | 1200– |
| 47. | கடை எண். 47 | பி. வினோத்குமார், த/பெ. பழனிசாமி | 6 x 6 | 6650/– |
| 48. | கடை எண். 48 | எம். பாலாஜி. | 6 x 6 | 1150– |
| 49. | கடை எண். 49 | எம் முரளிதரன் | 6 x 6 | 1100– |
| 50. | கடை எண். 50 | பி. தண்டபாணி | 6 x 6 | 1150– |
| 51. | கடை எண். 51 | எஸ் சிவானந்தம், த/பெ. செங்கோட்டையன் | 6 x 6 | 1150– |
| 52. | கடை எண். 52 | ஜி. அப்துல் ஹக்கீம் | 6 x 6 | 4050– |
| 53. | கடை எண். 53 | ஆர். சீனிவாசன், த/பெ. ரங்கசாமி | 6 x 6 | 10000– |
| 54. | கடை எண். 54 | பி. பால்ராஜ், த/பெ.பெருமாள் கவுண்டர் | 6 x 6 | 2450– |
| 55. | கடை எண். 55 | எம். வெங்கடேஷ்பிரபு, த/பெ.மகேந்திரன் | 6 x 6 | 7700– |
| 56. | கடை எண். 56 | எல். ராமமூர்த்தி, த/பெ. லோகநாதன் | 6 x 6 | 5800– |
| 57. | கடை எண். 57 | கே. நிஜமுதீன், த/பெ. காதர்பாஷா | 6 x 6 | 6300– |
| 58. | கடை எண். 58 | எம். ராஜேந்திரன், த/பெ. மணி | 6 x 6 | 5885– |
| 59. | கடை எண். 59 | மு. அப்துல்ஹமீது, த/பெ. முகமது இப்ராஹீம் | 6 x 6 | 4600– |
| 60. | கடை எண். 60 | சின்னபகவதி, தபெ/ப.நடராஜ்செட்டியார் | 6 x 6 | 8000– |
| 61. | கடை எண். 61 | கே. குமார், | 6 x 6 | 1500– |
| 62. | கடை எண். 62 | ஜி. பிரியா கணேசன் | 6 x 6 | 1500– |
| 63. | கடை எண். 63 | எஸ். சரவணன், த/பெ. சுந்தரம் | 12’.41/2 x 6 | 7300– |
| 64. | கடை எண். 64 | கே. வெள்ளியங்கிரி | 6 x 6 | 1250– |
| 65. | கடை எண். 65 | டி. விஸ்வநாதன் | 12’.41/2 x 6 | 13100– |
| 66. | கடை எண். 66 | எஸ். சிவராமன் | 6 x 6 | 1250– |
| 67. | கடை எண். 67 | பி. கலாமணி, க/பெ. பால்ராஜ் | 6 x 6 | 1950– |
| 68. | கடை எண். 68 | சி. மோகன்குமார் | 6 x 6 | 7200– |
| 69. | கடை எண். 69 | இ.ஆர். சிவக்குமார், த/பெ. ராஜகோபால் | 6 x 6 | 1250– |
| 70. | கடை எண். 70 | என்.விவேகானந்தன், த/பெ. நடராஜ் | 6 x 6 | 1200– |
| 71. | கடை எண். 71 | வி. செந்தில்குமார் | 6 x 6 | 1550– |
| 72. | கடை எண். 72 | என். துரைராஜ், த/பெ. நாச்சி | 12’.41/2 x 6 | 1750– |
| 73. | கடை எண். 73 | எம். செந்தில்குமார், த/பெ.மாரியப்பன் | 6 x 6 | 1150– |
| 74. | கடை எண். 74 | கே. வைரவேல், த/பெ. கனகராஜ் | 12’.41/2 x 6 | 1750– |
| 75. | கடை எண். 75 | எம். பார்த்திபன், த/பெ. ஆர். மருதுவேல் | 6 x 6 | 1050– |
| 76. | கடை எண். 76 | ராணி, க/பெ. பொன்னுவேல் | 6 x 6 | 1100– |
| 77. | கடை எண். 77 | பி. பத்மநாபன், த/பெ. பச்சமுத்து | 6 x 6 | 1100– |
| 78. | கடை எண். 78 | ஆர். சண்முகவேல், த/பெ. ராஜலிங்கம் | 6 x 6 | 1100– |
| 79. | கடை எண். 79 | சி. அருண் | 6 x 6 | 1250– |
| 80. | கடை எண். 80 | என். கேசவன் | 6 x 6 | 1100– |

| | | | | |
|---|---|---|---|---|
| 81. | கடை எண். 81 | கே. பாலமுருகன், த/பெ. கண்ணாயிரம் | 12'.41/2 x 6 | 1800– |
| 82. | கடை எண். 82 | கே. சின்னசாமி, த/பெ. கருப்புசாமி | 6 x 6 | 3300– |
| 83. | கடை எண். 83 | ஆர். வெங்கடேஸ், த/பெ. ராமசாமி | 12'.41/2 x 6 | 1750– |
| 84. | கடை எண். 84 | ஆர். திலகவதி, க/பெ. பி.ராஜா | 6 x 6 | 1150– |
| 85. | கடை எண். 85 | கே. வசந்தா, க/பெ. கனகராஜ் | 6 x 6 | 1100– |
| 86. | கடை எண். 86 | ஆர். பழனிசாமி, த/பெ. ராஜ் | 6 x 6 | 1150– |
| 87. | கடை எண். 87 | எஸ். மோகனாம்பாள், க/பெ. சரவணன் | 6 x 6 | 1200– |
| 88. | கடை எண். 88 | பி. புவனேஸ்வரன், த/பெ. பழனியப்பன் | 6 x 6 | 1100– |
| 89. | கடை எண். 89 | பி. தேவகி, க/பெ. பழனியப்பன் | 6 x 6 | 1100– |
| 90. | கடை எண். 90 | பி. ராமச்சந்திரன், த/பெ. பாலகுரு | 6 x 6 | 1100– |

மேற்கண்ட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விபரத்தினை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

1) **6x6** அளவுள்ள கடைகளுக்கு கடந்த பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உச்ச ஏலக் கேள்வியாக ரூ.2400/–க்கு (ரூபாய் இரண்டாயிரத்து நானூறு மட்டும்) கோரப்பட்டுள்ளது.
2) **12'.4x6** அளவுள்ள கடைகளுக்கு கடந்த பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உச்ச ஏலக் கேள்வியாக ரூ.2700/–க்கு (ரூபாய் இரண்டாயிரத்து எழுநூறு மட்டும்) கோரப்பட்டுள்ளது.

எனவே கடந்த பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் உச்ச ஏலக் கேள்விக்கு மேல் கோரப்பட்டுள்ள ஏல இனங்களுக்கு மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம். உச்ச ஏலக் கேள்விக்கு குறைவாக கோரப்பட்டுள்ள ஏல இனங்களுக்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரலாம்.

**(அ1/11205/09)**

**470. ஒத்தி வைக்கப்பட்டது.**

**30.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3, வார்டு எண்.33 புதுக்காலனி பகுதியில் மின்வாரிய மின்கம்பம் எண்.348 சாலையில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதால் அதனை இடம் மாற்றி அமைக்க 23.02.2016–ம் தேதிய தீர்மான எண்.341–ல் அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து மின்வாரியத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டதில் மேற்கண்ட மின்கம்பத்தை இடம் மாற்றி அமைக்க ரூ.58,960/– தொகையினை செலுத்த கூறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ.58,960/– தொகையினை செலுத்தியமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(இ1/1156/16)**

**471. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**31.** ஈரோடு மாநகராட்சியில் 01.04.2010 முதல் காலியாக இருந்த ஒரு உதவிசெயற்பொறியாளர் பணியிடத்திற்கு 2010–11ஆம் ஆண்டு 11.01.2011–ம் தேதி வெளியிடப்பட்ட தேர்ந்தோர் பட்டியலில் வரிசை எண்.1–ல் திரு. து.கு. ரவிச்சந்திரன், உதவி பொறியாளர் பெயரும் வரிசை எண்.2–ல் திரு. பி. பாஸ்கர், இளநிலை பொறியாளர் பெயரும் வைத்து வெளியிடப்பட்டது. இப்பட்டியலின்படி வ.எண்.1–ல் உள்ள திரு. து.கு.ரவிச்சந்திரன், உதவிபொறியாளர் என்பவருக்கு பதவி உயர்வு வழங்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு மாமன்றத் தீர்மான எண்.171, நாள் 28.04.2011–ல் அனுமதி வழங்கப்பட்டு உதவிசெயற்பொறியாளராக 13.06.2011–ல் பதவி உயர்வு வழங்கப்பட்டு விட்டது.

மாநகராட்சிப் பணி விதிகள் வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.237–ல் அட்டவணை 1 பத்தி எண். 8B(1)–ல் கூறப்பட்டுள்ள அறிவுரையில், ஏற்கனவே தேர்ந்தோர் பட்டியல் வெளியிடப்பட்டு அப்பட்டியல் அரசிடமோ அல்லது மாமன்றத்திலோ ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அவர்களை விடுவித்து மீதமுள்ளவர்களுக்கு பணி மூப்பு பட்டியல் வெளியிடலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

தற்போது இம்மாநகராட்சியில் 07.08.2014 முதல் ஒரு உதவி செயற்பொறியாளர் பணியிடம் காலியாக உள்ளது. இப்பணியிடத்தை மேலே கூறப்பட்டுள்ள பணிவிதிகளில் வெளியிடப்பட்டுள்ள அறிவுரையின்படி, 2010–11ம் ஆண்டில் 11.01.2011–ம் தேதி வெளியிடப்பட்டு மாமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்ந்தோர் பட்டியலில் வரிசை எண்.2–ல் உள்ள திரு. பி. பாஸ்கர், இளநிலை பொறியாளருக்கு உதவி செயற்பொறியாளராகப் பதவி உயர்வு வழங்க 2016–17ஆம் ஆண்டிற்கு தேர்ந்தோர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி திரு. பி. பாஸ்கர், இளநிலை பொறியாளருக்கு காலியாக உள்ள உதவி செயற்பொறியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கவும் அரசின் உறுதியாக்கம் பெறவும் மாமன்றத்தின் அஅமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(சி1/4818/14)**

**472. பொருள் ரத்து செய்யப்பட்டது.**

**32.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–4க்குட்பட்ட வார்டு எண்.50 கொல்லம்பாளையம் நீருந்து நிலையத்திலிருந்து மூலப்பாளையம் நீருந்து நிலையத்திற்கு பம்பிங் செய்யும் 50 எச்.பி. நீர்மூழ்கி மின்மோட்டார் பழுது ஏற்பட்டு குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டது. எனவே குடிநீர் விநியோகத்தின் அவசர அவசியத்தை கருதி மேற்படி கொல்லம்பாளையம் நீருந்து நிலையத்தில் உள்ள 50 எச்.பி. நீர்மூழ்கி மின்மோட்டார் பழுது நீக்கம் செய்ய பணியினை ஈரோடு மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு–15ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு திரு. எஸ். தர்மலிங்கம், ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,19,470/–ஐ வழங்கப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ1/453/16/மண்டலம்.4)**

**473. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**33.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–4க்குட்பட்ட வெண்டிபாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் காவேரி ஆற்றின் நடுவில் உள்ள பழைய நீர் சேகரிப்பு கிணற்றின் 60 எச்.பி. நீர்மூழ்கி மின்மோட்டார் பழுது ஏற்பட்டு குடிநீர் பம்பிங் செய்வது பாதிக்கப்பட்டது. எனவே குடிநீர் விநியோகத்தின் அவசர அவசியத்தை கருதி மேற்படி வெண்டிபாளையம் நீர் சேகரிப்பு கிணற்றில் உள்ள 60 எச்.பி. நீர்மூழ்கி மின்மோட்டார் பழுது நீக்கம் செய்யும் பணியினை ஈரோடு மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு திரு. வி. தாமோதரன், ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,84,931/–ஐ வழங்கப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ2/584/16/மண்டலம்.4)**

**474. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**34. 30–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. கே. லட்சுமி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

- இராஜாஜிபுரம் பகுதியில் பழைய பள்ளிக்கட்டிடத்தில் இளைஞர்களுக்கு உடற்பயிற்சி கூடம் ஒன்றினை கட்டிக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மில் வீதியில் சாக்கடை வசதி இரண்டு வீதிகளிலும் அமைத்துக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மில் வீதியில் சின்டெக்ஸ் டேங்க் பொருத்தி குழாய் நீட்டிப்பு மற்றும் வரகப்பா வீதியில் கடைசியில் சின்டெக்ஸ் டேங்க் பொருத்தி குழாய் நீட்டிப்பு செய்து கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- சகன் வீதியில் ஏற்கனவே உள்ள சின்டெக்ஸ் டேங்கில் சுந்தரம் வீடு வரை குழாய் நீடிப்பு செய்து கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஜானகி அம்மாள் லே அவுட் சின்டெக்ஸ் டேங்க்–3லிருந்தும், ராஜாஜிபுரம் எக்ஸ் கவுன்சிலர் வீட்டு அருகில் உள்ள சின்டெக்ஸ் டேங்கிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து கொடுத்தட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**475. 30ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.கே.லட்சுமி முன்மொழிய 10ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.வி.சி. நடராஜன் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**35.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–2க்குட்பட்ட பன்னீர்செல்வம் பூங்காவில் உள்ள நீரூற்று மற்றும் அதன் அமைப்புகள் பழுதடைந்து செயற்கை நீரூற்று செயல்படா வண்ணம் உள்ளது. மேற்படி பன்னீர் செல்வம் பூங்காவில் உள்ள செயற்கை நீரூற்று பழுதுகளை சரி செய்து புனரமைப்பு செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோர அலுவலக நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(இ1/2539/16)**

**476. பொருள் ரத்து செய்யப்பட்டது.**

**36.** உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீடித்த நகர்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP) மூலம் அரசாணை (பல) எண்.31 நகராட்சி நிர்வாக குடிநீர் வழங்கல் துறை நாள்.17.02.2015–ன் வாயிலாக மாதிரி நகரமாக உருவாக்குவதற்கு (Model City) ஈரோடு மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டது. மேற்படி திட்டத்தை உலக வங்கியின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தும் பொருட்டு M/S.INMAAS, சென்னை என்ற நிறுவனம் மூலம் நான்கு ஆண்டுகளுக்கு தொழில்நுட்ப வல்லுனர் குழு (Technical Expert Committee) அமைக்கப்பட்டுள்ளது.
Model City திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் கீழ் வருமாறு.

1. நகர்புறங்களுக்கு இலக்கு அடிப்படையில் மான்யங்கள் (Results Based Grants for Urban)
2. நகர்புற சேவைகளுக்கான முதலீடுகள் (Investment in Urban Service)
3. நகர்புற வளர்ச்சிக்கு தொழில்நுட்ப உதவிகள் (Urban sector Technical Assistance)

மேற்படி திட்டத்தின் நோக்கங்கள் செயல்படுத்த நியமிக்கப்பட்ட மேற்கண்ட தொழில்நுட்ப வல்லுனர் குழுவின் மூலம் முதல் ஆண்டு (2015–16) இலக்குகளில் ஒன்றான வருவாய் அபிவிருத்தித் திட்டம் (Revenue Improvement Plan) தயார் செய்து சமர்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு சமர்பிக்கப்பட்ட வருவாய் அபிவிருத்தித் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி செயல்படுத்தத் துவங்கினால் இத்திட்ட வழிகாட்டுதலின்படி முதலாமாண்டு வருடாந்திர மான்யம் ரூ.6.385 கோடி இம்மாகராட்சிக்கு விடுவிக்கப்படும்.

மேற்கண்ட வருவாய் அபிவிருத்தித் திட்டத்தில் மாநகராட்சியின் வருவாயை கீழ்கண்டவாறு அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**1. சொத்துவரி (Property Tax)**

i. அனைத்து கட்டிடங்களுக்கும் முழுஅளவிலான சொத்து வரி விதித்தல்
ii. புவிசார் ஆய்வறிக்கையின்படி (GIS) விடுபட்ட சொத்துகளுக்கு வரிவிதிப்பு செய்தல்
iii. சொத்து வரி பாக்கியை முழு அளவில் வசூலித்தல் மற்றும் வழக்குகள் மூலம் நிலுவையிலுள்ள சொத்து வரிகளை விரைவில் வசூலித்தல்.
iv. மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 11 உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒரே சீரான சொத்துவரி விதிக்கும் வகையில் திருத்தம் செய்தல்
v. அரசு வரிகாட்டுதலின்படி சொத்துவரி பொது திருத்தம் மற்றும் கட்டண விகிதம் திருத்தம் (Zonal Rate) ஆகியவற்றை மேற்கொள்ளுதல்

**2. குடிநீர் கட்டணம்**

i. குடிநீர் கட்டண நிலுவைகளை வசூலித்தல்

ii. குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகைகளை மாநகராட்சி முழுமைக்கும் ஒரே சீராக இருக்குமாறு திருத்தம் செய்து நடைமுறைப்படுத்துதல்

iii. தனிக் குடிநீர் திட்டம் முடிக்கப்பட்டு செயல்பாட்டிற்கு வரும்போது கூடுதலாக வழங்கப்படும் புதிய குடிநீர் குழாய் இணைப்புகளின் மூலம் வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணங்கள் மூலம் வருவாய் அதிகரிக்கச் செய்தல்.

**3. பாதாள சாக்கடைத் திட்டம்**

பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவுற்ற பின்னர் வழங்கப்படும் இணைப்புகள் மூலம் பெறப்படும் வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர கட்டணங்கள் மூலம் வருவாயை பெருக்குதல்

**4. திடக் கழிவு மேலாண்மைத் திட்டம்**

திடக் கழிவு மேலாண்மையில் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் வணிகப் பகுதிகளில் சேகரிக்கும் குப்பைகளுக்கு ஏற்ப பயனீட்டாளர் கட்டணம் (User Charges) வசூலித்தல்.

**5. வாடகை மற்றும் குத்தகை இனங்கள்**

மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களின் வாடகை மற்றும் குத்தகை இனங்களை 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை 5% உயர்த்தி வசூலிக்கப்படுவதன் மூலம் வருவாய் அதிகரித்தல்.

மேற்படி குத்தகை மற்றும் வாடகை இனங்களில் உள்ள நிலுவையை வசூலித்தல்.

**6. தொழில் உரிமக் கட்டணம், கட்டிட உரிமக் கட்டணம் மற்றும் தொழில்வரி**

i. மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட அனைத்து உள்ளாட்சி பகுதிகளிலும் உள்ள கடைகளுக்கும் விடுபடாமல் தொழில் உரிமம் வழங்கி வருவாய் பெருக்குதல்.

ii. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கார் சட்டப் பல்கலைக் கழகம் வழங்கிய அறிக்கைக்கேற்ப மாநகரப் பகுதிகளில் உள்ள கடைகளுக்கு உரிமம் வழங்கப்பட வேண்டும்.

iii. மாநகரில் உள்ள அனைத்து கட்டிடங்களையும் ஆய்வு செய்து உரிய வரிவிதிப்பு செய்தல்

iv. வரிவிதிக்கப்படாத மற்றும் குறை வரி விதிக்கப்பட்ட கட்டிடங்களை கண்டறிந்து உரிய வரிவிதிப்பு செய்தல்.

v. தொழில்வரி நிலுவைகளை வசூலிக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளுதல்

vi. சுயதொழில் செய்பவர்கள் மற்றும் வணிகர்களை களப்பணியாளர் மூலம் கண்டறிந்து அவர்களுக்கு தொழில்வரி விதித்தல்.

vii. தொழில்வரி விதிக்கப்பட்டு செயல்படாத நிறுவனங்களின் பட்டியலிட்டு அவற்றை தொழில்வரி விதிப்பிலிருந்து நீக்குதல்.

கனி மார்கெட்டில் புதிய வணிக வளாகம் கட்டி பயன்பாட்டிற்கு விடப்படும் பொழுது ஆண்டொன்றுக்கு ரூ.3.17 கோடி 2019–20–ம் ஆண்டு முதல் மாநகராட்சிக்கு வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கண்டவாறு தயாரிக்கப்பட்ட வருவாய் அபிவிருத்தித் திட்டம் மூலம் இம்மாநகராட்சிக்கு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.18.00 கோடி வருவாய் கூடுதலாக வரவாய்ப்புள்ளது.

மேலும் இந்த வருவாய் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தும் பட்சத்தில் மாடல் சிட்டி வழிகாட்டு நெறிமுறையின்படி 2015–16 முதல் நான்காண்டுகளுக்கு ஒரு ஆண்டிற்கு ரூ.6.385

கோடி வீதமும் ஐந்தாவது மற்றும் ஆறாவது ஆண்டில் வருவாய் பெருக்கத்திற்கு ஏற்ப ஆண்டொன்றுக்கு ரூ.9.578 கோடியும் மாநகராட்சிக்கு மான்யமாக கிடைக்கப்பெறும்.

எனவே மேற்கண்டவாறு தயாரித்துள்ள வருவாய் அபிவிருத்தி திட்டத்திற்கு (Revenue improvement Plan) மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>

வருவாய் அபிவிருத்தித் திட்டத்திற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(இ1/4188/14)**

**477. பதிவு செய்யப்பட்டது.**

**37.** ஈரோடு மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் புதிய சிப்பம்–1ல் கீழ்க்கண்டுள்ளபடி பணிகள் செய்யப்பட வேண்டியுள்ளது.

1) சிப்பம்–1 மீதமுள்ள பணிகளின் கீழ் ஈரோடு சூரம்பட்டி மற்றும் காசிபாளையம் பகுதிகளில் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் ரங்கம்பாளையம் ஈரோடு கலைக்கல்லூரி அருகில் LS-8 (நீருந்து நிலையம்–8) கட்டப்பட்டு வருகிறது. இதன் அருகில் உள்ள ஓடையிலிருந்து வரும் நீரினை வராமல் தடுப்பதற்காக RCC தடுப்பு சுவர் (Retaining Wall) கட்டுவதற்கு தோராய செலவு தொகை ரூ.6.00 இலட்சம் ஆகும்.

2) சிப்பம்–1 மீதமுள்ள பணிகளின் கீழ் ஈரோடு சூரம்பட்டி மற்றும் காசிபாளையம் பகுதிகளில் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளில் கூடுதலாக மூன்று நீருந்து நிலையங்கள் (LS 11,LS 12 மற்றும் LS 13 )ரங்கம்பாளையம், அணைக்கட்டு மற்றும் சூரம்பட்டி சாஸ்திரி சாலை ஆகிய பகுதிகளில் கட்டுவதற்கு தோராய செலவு தொகை ரூ.48.00 இலட்சம் ஆகும்.

3) சிப்பம்–1 மீதுள்ள பணிகளின் கீழ் பெரியார் நகர் பகுதியில் கட்டப்பட்டு வரும் நீருந்து நிலையம்–1 (Pumping Station-1)–லிருந்து 600 Dia DI Pipe line மூலமாக கழிவுநீரை இதன் அருகிலுள்ள பெரும்பள்ளம் ஓடையை கடந்து எடுத்துச் செல்வதற்கு பைப்கேரிங் பாலம் கட்டுவதற்கு தோராய செலவு தொகை ரூ.20.00 லட்சம் ஆகும். மேற்கண்ட மூன்று பணிகளையும் அவசியமாக செய்ய வேண்டியுள்ளபடியால் இதனை மேற்படி பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு அனுமதித்துள்ள தொகைக்குள் செய்து கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிகளுக்கான செலவின தொகையினை பாதாள சாக்கடைத்திட்ட நிதியிலிருந்து செலவிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(பா.சா.தி/4498/13)**

**478. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**38.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–2 சம்பத் நகர் பகுதி ஈரோடு – ஆ கிராமம் ரீ.ச.எண்.415/1A1–ல் சம்பத் நகர் மனைப்பிரிவு L.P.R(C.N) No.228/83–ல் பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்ட (R31) நிலத்தில் உள்ள மேல்நிலை தொட்டி மிகவும் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது. எனவே பொது மக்களின் நலன் கருதி ஆபத்தை தவிர்க்கும் பொருட்டு மேற்படி மேல்நிலை தொட்டியை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளதால் மேற்படி மேல்நிலை தொட்டியை அப்புறப்படுத்தவும் அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**

அனுமதி வழங்கலாம்.

**(இ3/2559/16)**

**479. அனுமதி வழங்கப்பட்டது.**

**இடம். ஈரோடு** **மேயர்,**

**நாள். 20.06.2016** **ஈரோடு மாநகராட்சி**

# ஈரோடு மாநகராட்சி
# மாமன்ற அவசரக் கூட்ட அறிவிப்பு
# திருவள்ளுவராண்டு 2047 வைகாசித் திங்கள் 32–ம் நாள்

**2016–ம் ஆண்டு ஜுன் மாதம் 14–ஆம் தேதி (14.06.2016) செவ்வாய் கிழமை காலை 11.30 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

/////

**1. மாண்புமிகு மேயர், மரியாதைக்குரிய துணைமேயர், மண்டலத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.**

- ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட (வார்டு–ஏ, பிளாக்–3, டி.எஸ். நெ.226) 2/25 புதிய கதவு எண்.13, கருங்கல்பாளையம் அஞ்சல், கிருஷ்ணம்பாளையம் காலனி பகுதியில் அமைந்துள்ள கடையப்பிச்சி திருக்கோயில் ஆனது நகரளவை ஆவணங்களில் கோயில் என உள்ளதால் மேற்படி கோவிலுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு ஆட்சேபனை இல்லை என இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**480.** **மாண்புமிகு மேயர் முன்மொழிய மரியாதைக்குரிய துணைமேயர் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**2.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட வார்டு எண்.35ல் திருமதி. பி. அருணா க/பெ இளையராஜா, 46/6 ஜெகநாதன் வீதியில் வசிப்பவர் தனது குடியிருப்பு உபயோகத்திற்காக புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைக்கும் பட்சத்தில் தவறுதலாக மேற்படியாரின் குடியிருப்புக்கு முன்புறம் நகராட்சி சாலையின் ஓரத்தில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து விட்டார்கள்.

எனவே, மனுதாரர் மேற்படி தவறுதலாக அமைக்கப்பட்ட ஆழ்துளை குழாய் கிணற்றில் தனது சொந்த செலவில் மின்மோட்டார் பொருத்தி குழாய் அமைத்து தனது சொந்த உபயோகத்திற்கு நீர் எடுத்துக் கொள்ளவும் மேலும் அப்பகுதியில் உள்ள சாலையில் பொதுமக்கள் உபயோகப்படுத்தும் வகையில் ஒரு பொது குடிநீர் குழாய் அமைத்து கொடுப்பதாக தெரிவித்து அதற்கு அனுமதி வழங்க கோரி விண்ணப்பித்துள்ளார்கள். எனவே, மேற்படி ஆழ்துளை குழாய் கிணற்றிலிருந்து மனுதாரரின் சொந்த உபயோகத்திற்காக நீர் எடுத்துக் கொள்ளவும் மற்றும் அப்பகுதியில் பொது குடிநீர் குழாய் ஒன்று அமைத்து கொடுக்கவும் கோரியுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு–</u>**

மாமன்றம் முடிவு செய்யலாம்.

**இ1/2636/2016**

**481. ஒத்தி வைக்கப்பட்டது.**

**3.** ஈரோடு மாநகராட்சி மைய அலுவலகத்தில் உள்ள 10 கே.வி.ஏ. யு.பி.எஸ்–ன் பேட்டரிகள் மற்றும் 25 கே.வி.ஏ ஜெனரேட்டரின் பேட்டரிகள் பழுதடைந்து உள்ளது. தற்போது தேர்தல் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி யு.பி.எஸ்–களுக்கு தேவைப்படும் 200 ஏ.எச். பேட்டரிகள் 10 எண்ணிக்கையும் மற்றும் ஜெனரேட்டருக்கு தேவைப்படும் 100 ஏ.எச். பேட்டரி ஒரு எண்ணிக்கையும் வாங்கவும் மற்றும் அதற்கான தோராய செலவினம் ரூ.1.60 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு–</u>**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/991/16**

**482. <u>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</u>**

**4.** ஈரோடு மாநகராட்சி மைய அலுவலக பயன்பாட்டில் உள்ள ரீக்கோ ஜெராக்ஸ் இயந்திரங்கள் மாடர் 6001, 2800சி மற்றும் 3501 ஆகிய மூன்று ஜெராக்ஸ் இயந்திரங்களில் ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் சரி செய்ய ஆண்டு பராமரிப்பினை ரீக்கோ நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பிரைட் மார்க்கெட்டிங் கம்பெனி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்வதற்கும், மூன்று இயந்திரங்களுக்கும் ஆண்டு பராமரிப்பு கட்டணம் ரூ.1,98,653/– மற்றும் 6001 மாடல் ஜெராக்ஸ் இயந்திரத்திற்கு டெவலப்பர் புதியதாக பொருத்துவதற்கு ஆகும் செலவினம் ரூ.19,601/–க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு–</u>**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலகப்பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட மூன்று ஜெராக்ஸ் இயந்திரங்கள் ஆண்டு பராமரிப்பு மற்றும் டெவலப்பர் பொருத்தும் பணியினை மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவவக நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/1009/16**

**483. <u>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</u>**

**5.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–2க்குட்பட்ட வார்டு எண்.17, சூளை பகுதியில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதி 2013–14 திட்டத்தில் (1+5 பெண்கள்) 16.04.2015 அன்று இ–டெண்டரிங் முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள். பி.டி.கே. கன்ஸ்ட்ரக்சன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்ற தீர்மான எண்.21 நாள் 12.08.2015 ஒப்புதல் வழங்கி கீழ்கண்டவாறு பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. “Construction of New Modular Universal Design Toilet and

Physically Challanged and Five Regular Toilet" மேற்படி புதிய தொழில்நுட்பத்தில் கழிப்பறை அமைக்க தற்சமயம் சந்தையில் போதிய அளவு தரமான பொருட்கள் இருப்பு இல்லாத காரணத்தாலும் மற்றும் உயர் அதிகாரிகளின் அறிவுரையின் படியும் பணியினை விரைந்து முடிக்கும் பொருட்டு அனைத்து பகுதிகளிலும் செங்கற்களை கொண்டு கட்டப்பட்டுள்ள நவீன கழிப்பிடம் போல் தற்சமயம் அமைக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பணி மதிப்பீட்டிற்கு (Working Estimate) அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமல் அதே ஒப்பந்ததாரர் திருவாளர்கள். பி.டி.கே. கன்ஸ்ட்ரக்சன் 4.97 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் வைத்து பணி மேற்கொள்ளவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு–**

மேற்படி திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி வார்டு எண்.17 சூளை பகுதியில் புதிய தொழில்நுட்பத்தில் கழிப்பறை அமைக்க தற்சமயம் சந்தையில் போதிய அளவு தரமான பொருட்கள் இருப்பு இல்லாத காரணத்தாலும், பணியினை விரைந்து முடிக்கும் பொருட்டு அனைத்து பகுதிகளிலும் செங்கற்கள் கொண்டு கட்டப்பட்டுள்ள நவீன கழிப்பிடம் போல் அமைக்கவும் மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமல், மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.97 சதவீதம் அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள் பி.டி.கே. கன்ஸ்ட்ரக்சன் அவர்கள் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பணி மதிப்பீட்டிற்கும் (Working Estimate) மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று இப்பணி மேற்கொண்டமைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/1096/2011–4**

**484. மதிப்பீட்டு தொகை குறிப்பிடப்படாததால் மதிப்பீட்டு தொகையை குறிப்பிட்டு மீண்டும் பொருள் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டது.**

**6.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–2க்குட்பட்ட வார்டு எண்.16, ஆயப்பாளி பகுதியில் நம்ம டாய்லட் கட்டும் பணிக்கு (1+5 பெண்கள்) 16.04.2015 அன்று இ–டெண்டரிங் முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள். பி.டி.கே. கன்ஸ்ட்ரக்சன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்ற தீர்மான எண்.21 நாள் 12.08.2015 ஒப்புதல் வழங்கி கீழ்கண்டவாறு பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. "Construction of New Modular Universal Design Toilet and Physically Challanged and Five Regular Toilet" மேற்படி புதிய தொழில்நுட்பத்தில் கழிப்பறை அமைக்க தற்சமயம் சந்தையில் போதிய அளவு தரமான பொருட்கள் இருப்பு இல்லாத காரணத்தாலும் மற்றும் உயர் அதிகாரிகளின் அறிவுரையின் படியும் பணியினை விரைந்து முடிக்கும் பொருட்டு அனைத்து பகுதிகளிலும் செங்கற்களை கொண்டு கட்டப்பட்டுள்ள நவீன கழிப்பிடம் போல் தற்சமயம் அமைக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பணி மதிப்பீட்டிற்கு (Working Estimate) அனுமதி வேண்டப்படுகிறது, மற்றும் மேற்கண்ட அதே ஒப்பந்ததாரர் திருவாளர்கள் பி.டி.கே. கன்ஸ்ட்ரக்சன் 4.87 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் வைத்து பணி மேற்கொள்ளவும் மற்றும் மேற்படி ஆயப்பாளி பகுதியில் "Open defecation" திட்டத்தின் மூலம் புதிய கழிப்பிடம் கட்டும் பணி நடைபெற்று வருவதால், அதற்கு மாற்று இடமாக சூரிப்பாறை பகுதியில் கழிப்பிடம் இல்லாத காரணத்தாலும், அப்பகுதி மக்களின் வேண்டுகோளின் படியும் உயர்அதிகாரிகளின் அறிவுரையின் படியும், மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் அதே ஒப்பந்ததாரர் திருவாளர்கள். பி.டி.கே. கன்ஸ்ட்ரக்சன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி

விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ளவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பணி மதிப்பீட்டிற்கு (Working Estimate) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு—**</u>

மேற்படி திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி வார்டு எண்.16 ஆயப்பாளி பகுதியில் கட்டப்படவுள்ள கழிப்பறைக்கு மாற்று இடமாக சூரிப்பாறை மயானம் அருகில் முன்புறம் உள்ள காலியிடத்தில் கழிப்பிடம் அமைக்கவும், மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமல், மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 4.87 சதவீதம் அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள். பி.டி.கே. கன்ஸ்ட்ரக்சன் அவர்கள் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பணி மதிப்பீட்டிற்கு (Working Estimate) மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று இப்பணி மேற்கொண்டமைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/10096/2011**

**485. மதிப்பீட்டு தொகை குறிப்பிடப்படாததால் மதிப்பீட்டு தொகையை குறிப்பிட்டு மீண்டும் பொருள் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டது.**

**7.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்—2க்குட்பட்ட வார்டு எண்.16, கொளத்துப்பாளையம் பகுதியில் மாற்றுத்திறனாளிகளுக்கான நல நிதி 2013—14 திட்டத்தில் (1+5 பெண்கள்) 16.04.2015 அன்று இ—டெண்டரிங் முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள். பி.டி.கே. கன்ஸ்ட்ரக்சன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்ற தீர்மான எண்.21 நாள் 12.08.2015 ஒப்புதல் வழங்கி கீழ்கண்டவாறு பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. “Construction of New Modular Universal Design Toilet and Physically Challanged and Five Regular Toilet” மேற்படி புதிய தொழில்நுட்பத்தில் கழிப்பறை அமைக்க தற்சமயம் சந்தையில் போதிய அளவு தரமான பொருட்கள் இருப்பு இல்லாத காரணத்தாலும் மற்றும் உயர் அதிகாரிகளின் அறிவுரையின் படியும் பணியினை விரைந்து முடிக்கும் பொருட்டு அனைத்து பகுதிகளிலும் செங்கற்களை கொண்டு கட்டப்பட்டுள்ள நவீன கழிப்பிடம் போல் தற்சமயம் அமைக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பணி மதிப்பீட்டிற்கு (Working Estimate) அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமல் அதே ஒப்பந்ததாரர் திருவாளர்கள் பி.டி.கே. கன்ஸ்ட்ரக்சன் 4.97 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் வைத்து பணி மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு—**</u>

மேற்படி திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி வார்டு எண்.16 கொளத்துப்பாளையம் பகுதியில் புதிய தொழில்நுட்பத்தில் கழிப்பறை அமைக்க தற்சமயம் சந்தையில் போதிய அளவு தரமான பொருட்கள் இருப்பு இல்லாத காரணத்தாலும், பணியினை விரைந்து முடிக்கும் பொருட்டு அனைத்து பகுதிகளிலும் செங்கற்களை கொண்டு கட்டப்பட்டுள்ள நவீன கழிப்படம் போல் அமைக்கவும் மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமல், மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 4.97 சதவீதம் அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்

திருவாளர்கள் பி.டி.கே. கன்ஸ்ட்ரக்சன் அவர்கள் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பணி மதிப்பீட்டிற்கும் (Working Estimate) மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று இப்பணி மேற்கொண்டமைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/10096/2011–8**

**486. மதிப்பீட்டு தொகை குறிப்பிடப்படாததால் மதிப்பீட்டு தொகையை குறிப்பிட்டு மீண்டும் பொருள் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டது.**

**8.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–4க்குட்பட்ட கீழ்க்கண்ட இடங்களில் நம்ம டாய்லட் கட்டும் பணிகள்அரசின் உட்கட்டமைப்பு மற்றும் இடைவெளி நிரப்புதல் நிதி 2013–14 மற்றும் 2014–15 ஆண்டு மான்யத்துடன் மேற்கொள்ள மாமன்றத்தீர்மான எண்.683 நாள்.30.09.2013 மற்றும் மாமன்றத்தீர்மான எண்.178 நாள்.30.03.2015ல் ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மண்டலம்–4க்குட்பட்ட குமரன் நகர் பகுதியில் நம்ம டாய்லெட் கட்டுதல் பணி (1+5 பெண்கள்) | 18.42 |
| 2. | மண்டலம்–4க்குட்பட்ட வார்டு எண்.60, சோலார் நகர் சுதந்திராபுரம் அருகில் நம்ம டாய்லெட் கட்டுதல் பணி (1+5 பெண்கள்) | 18.00 |

மேற்கண்ட இரண்டு பணிகளுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி துவக்கப்படும் போது அப்பகுதிகளின் சுற்றுப்புற மக்கள் மிகுந்த எதிர்ப்பும் மற்றும் ஆட்சேபணையும் செய்ததால் மேற்படி பணிகள் நிறுத்தப்பட்டது.

இதற்கிடையில் மாநகராட்சி பொது நிதியில் கீழ்க்கண்ட அவசியமான இரண்டு இடங்களில் புதிய கழிப்பிடங்கள் கட்ட கீழ்க்கண்டவாறு நிர்வாக அனுமதி பெறப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | நிர்வாக அனுமதி விபரம். |
|---|---|---|---|
| 1. | மண்டலம்–1க்குட்பட்ட வார்டு எண்.14, எம்.ஜி.ஆர். நகரில் புதிய நவீன கழிப்பிடம் கட்டுதல். | 16.00 | மாமன்றத் தீர்மான எண். 163/ நாள். 12.08.15 |
| 2. | மண்டலம்–2க்குட்பட்ட வார்டு எண்.28, பெரிய மார்க்கெட்டில் புதிய நவீன கழிப்பிடம் கட்டுதல். | 6.00 | ஆணையர் மன்றக் கூட்டம் நாள்.22.03.2013. |

ஆகவே அரசின் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதி 2013–14 மற்றும் 2014–15–ன் கீழ், பணி உத்தரவு வழங்கப்பட்டு பொதுமக்களின் ஆட்சேபணையால் துவக்கப்படாமல் இருக்கும் மேற்படி இரண்டு நம்ம டாய்லெட் கழிப்பறைகளை ஏற்கனவே மாமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட இடத்திற்கு பதிலாகவும் மற்றும் மாநகராட்சியின்

பொதுநிதியில் பணிஉத்தரவு வழங்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட இரண்டு இடங்களில் மேற்படி நம்ம டாய்லெட்டுக்களை கட்டலாம். அதன் விபரம்.

| வ. எண். | ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டது | புதிதாக மாற்றம் செய்யப்படவுள்ள இடம். |
|---|---|---|
| 1. | மண்டலம்–4க்குட்பட்ட குமரன் நகர் பகுதியில் நம்ம டாய்லெட் கட்டுதல் பணி (1+5 பெண்கள்) | மண்டலம்–1க்குட்பட்ட வார்டு எண்.14, எம்.ஜி.ஆர். நகர் பகுதி. |
| 2. | மண்டலம்–4க்குட்பட்ட வார்டு எண்.60, சோலார் நகர் சுதந்திராபுரம் அருகில் நம்ம டாய்லெட் கட்டுதல் பணி (1+5 பெண்கள்) | மண்டலம்–2க்குட்பட்ட வார்டு எண்.28, பெரிய மார்க்கெட் பகுதி. |

மேலும், மேற்கண்டவாறு பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்ட இரண்டு புதிய கழிப்பிடங்கள் கட்டும் பணியை ரத்து செய்யவும் மற்றும் ஏற்கனவே மேற்படி இரண்டு நம்ம டாய்லெட் கழிப்பறைகளை கட்ட பணி உத்தரவு வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் முறையே திரு.முனியப்பன் மற்றும் திரு.கே.ஏ. சண்முகம் அவர்களின் மூலமாகவே மாற்றம் செய்யப்படும் இடங்களில் மேற்படி நம்ம டாய்லெட்களை கட்டுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது நிதியில் உத்தேசிக்கப்பட்ட மேற்கண்ட இரண்டு கழிப்பிடப் பணிகளை ரத்து செய்வதன் மூலம் மாநகராட்சி பொதுநிதி ரூ.22.00 லட்சம் சேமிக்கப்படுகிறபடியால், மேற்கண்டவாறு பணிகள் மாற்று அடிப்படையில் செய்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :–</u>**

ஏற்கனவே மண்டலம்–க்குட்பட்ட (1) சுதந்திராபுரம், (2) குமரன் நகர் பகுதியில் அரசு மானியத்துடன் நம்ம டாய்லெட் கழிப்பறைகள் கட்ட மாமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட இடத்திற்கு பதிலாக பொதுநிதியில் கழிப்பிடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்ட பணிகளை ரத்து செய்து அந்த இடங்களில் முறையே மண்டலம்–1க்குட்பட்ட வார்டு எண்.14, எம்.ஜி.ஆர். நகர் பகுதி மற்றும் மண்டலம்–2க்குட்பட்ட வார்டு எண்.28, பெரிய மார்க்கெட் பகுதியில் மேற்படி நம்ம டாய்லெட் கழிப்பறைகள் கட்ட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/51/2012**

**487. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**9.** ஈரோடு மாநகரரட்சி மண்டலம்–4க்குட்பட்ட வார்டு எண்.46, ஓடைக்காட்டு வலசு மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர். மேலும் வரும் கல்வியாண்டில் அரசு உத்திரவின்படி ஆங்கில வழி கல்வி வகுப்பு ஆரம்பிக்கப்பட உள்ளபடியால் அதற்கான கூடுதல் வகுப்பறைகள் இல்லாத காரணத்தினால் ஏற்கனவே உள்ள கிழக்கு பார்த்த பள்ளி கட்டிடத்தின் முதல் தளத்தில் இரண்டு வகுப்புகள் கொண்ட கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.17.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :–</u>**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம். இச்செலவினத்தை மாநகராட்சி கல்வி நிதியில் இருந்து ஈடு செய்யவும் அனுமதி வழங்கலாம்.

**இ1/1832/2014**

**488. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**10. 29–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. பொ. இராமச்சந்திரன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

கீழ்க்கண்ட பகுதிகளில் கல்வெர்ட் பாலங்கள் அமைத்துக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

கே.என்.கே.ரோடு பின்புறம் வரகப்ப வீதி சந்திப்பு
சுப்பையன் வீதி – இராஜாஜிபுரம் சந்திப்பு
கே.என்.கே.ரோடு – திருநகர் காலனி சந்திப்பு

- வீர வீதியில் ஏற்கனவே உள்ள சின்டெக்ஸ் டேங்க்கில் இருந்து லோது வீடு வரை குழாய் நீட்டிப்பு செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**489. 29ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. பொ. இராமச்சந்திரன் முன்மொழிய 30ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. கே. லட்சுமி வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**இடம்: ஈரோடு** **மேயர்,**
**நாள்:20.06.2016** **ஈரோடு மாநகராட்சி**